பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 19 சனிக்கிழமை 03.07.2021 கதிர் 106

## மேலும் 563 பேர் சிக்கினார்கள்!

நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 563 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதற்கமைவாக

☞ 2

### கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான

# மாவை, சித்தர், செல்வம் யாழில் திடீரென சந்திப்பு

### சகலரையும் அரவணைத்துப் பயணிக்க முடிவு



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான அவசர சந்திப்பு இன்று பகல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

☞ 2

## கிழக்கில் நேற்று மட்டும் 214 பேருக்குத் தொற்று

கிழக்கு மாகாணத்தில் நேற்று மொத்தம் 214 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தால் இன்று காலை வெளியிடப்பட்ட தொற்று நோய் நாளாந்த நிலவர அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 83 பேருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 46 பேருக்கும் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 85 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## கடலட்டை பிடித்தவர்களுக்கு 75 ஆயிரம் ரூபா குற்றப்பணம்

### பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பு

(ந.லோகதயாளன்)

கட்டைக்காடு கடற்பரப்பில் அனுமதியின்றி கடலட்டை பிடித்த 3 மீனவர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் 75 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கட்டைக்காடு கடற்பரப்பில் கடந்த 30ஆம் திகதி எந்தவொரு அனுமதியும் இன்றி பகல் வேளையில் கடலட்டை பிடித்த மூவரை யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு படகு, அதற்கான இயந்திரம், சிலிண்டர், கண்ணாடிகள் மற்றும் பாதணிகள் என்பனவும் கையகப்படுத்தப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட மூன்று மீனவர்களும்

☞ 2

## பெண்ணின் சடலம் மீட்பு

எல்பிட்டிய மிரிஸ்வத்த பிரதேசத்திலுள்ள மணல் குழியில் மிதந்த நிலையில் பெண்ணொருவரின் சடலத்தை எல்பிட்டிய பொலிஸார் இன்று மீட்டுள்ளனர்.

எல்பிட்டிய நியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் 90 பேர் உட்பட வடக்கில் நேற்று 128 பேருக்குத் தொற்று


வடக்கு மாகாணத்தில் மேலும் 128 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டுமையத்தால் இன்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 90 பேருக்கும், கிளிநொச்சி மவட்டத்தில் 11 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் 06 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 10 பேருக்கும் நேற்று தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



நுவரெலியா மாவட்டத்தின் நோர்வூட்டில் பலாமரத்தில் தூக்கிட்ட நிலையில், மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலத்தை நோர்வூட் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வென்ஞர் லோவலோரன்ஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான திருக்கேதீஸ்வரன் (வயது 49) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மாடு பிடிக்கச் செல்வதாகக் கூறிவிட்டு, வீட்டிலிருந்து

☞ 2

## முல்லைத்தீவு உட்பட 3 மாவட்டங்களில் மூன்று கிராமங்கள் முற்றாக முடக்கம்!

முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் மூன்று கிராமங்கள் இன்று காலை 6 மணி முதல் தனிமைப் படுத்தப்பட் டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந் திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மலை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் நாயாறு மீன்பிடித்துறை பகுதியும், கேகாலை மாவட்டத்தில் மிஹிபிட்டி கிராம சேவகர் பிரிவில் மாதெய்யாவ கிராமமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பொலிஸ் பிரிவில் மருதமுனை - 3 கிராம சேவகர் பிரிவும் முடக்கப்பட்டுள்ளது.

## தாவடியில் 4 வாள்கள் மீட்பு



(இ.கலையமுதன்)

வன்முறைக் கும்பலால் கைவிடப்பட்ட நான்கு வாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தாவடி தோட்டவெளிப் பகுதியில் அவை இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

☞ 2

## குடும்பஸ்தர் ........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
சென்றார் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், சடலமாக மீட்கப்பட்டவரின் சட்டைப் பையில் இருந்து கடிதமொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில். என் சாவுக்கு நானே காரணம். எனவே, வீட்டிலுள்ளவர்களை சித்திரவதை செய்ய வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தாவடியில் 4 வாள்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)
மருதனார்மடம் சந்தைக்குப் பின்புறமாக உள்ள வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் புகுந்து தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்தோர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களைத் தேடிச் சென்றபோதே வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கடலட்டை பிடித்த...

(முதலாம் பக்க தொடர்ச்சி)
நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் அனுமதி இன்றி கடலட்டை பிடித்த குற்றச்சாட்டின் பெயரில் நீதிவான் கிருஷாந்தன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

மன்னார், கிளிநொச்சி மற்றும் கட்டைக்காட்டைச் சேர்ந்த மீனவர்களே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மூன்று மீனவர்களும் அனுமதியன்றி கடலட்டை பிடித்த குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் பெயரில் மூன்று மீனவர்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 75 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

படகு உள்ளிட்ட உடமைகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டதோடு அது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## மேலும் 563..........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியக் குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 823 ஆக உயர்வடைந்துள்ளது.

மாத்தளை பிரதேசத்திலேயே அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்தில் 66 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 49 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 47 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறும் வகையில், நேற்று மேல் மாகாணத்திலிருந்து வெளியேறிச் செல்ல முற்பட்ட 564 பேர் மீண்டும் அவர்களது பிரதேசங்களுக்கே திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## மாவை, சித்தர்,....

(முதலாம் பக்க தொடர்ச்சி)
இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், இன்றைய சந்திப்பு முடிவின் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாங்கள் எல்லோரையும் அரவணைத்து போகின்ற நிலைமையைக் கையாளுகின்ற ஒரு செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு முற்றுமுழுதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையிலே நாளை நடைபெறவுள்ள கூட்டத்தில் நாங்கள் எப்படிச் செயற்பட வேண்டும், தொடர்ந்து அதை எப்படி நாம் கையாளவேண்டும் என்பது தொடர்பில் முடிவை எடுப்போம் - என்றார்.

என்னென்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பது தொடர்பில் கேள்வி எழுப்பியபோது,

நிலம் சம்பந்தமாகவும் மாகாண சபைகள் சம்பந்தமாகவும் பேசினோம். எங்களுடைய இனம்சார்ந்த பூர்வீகத்தை உடைத்தெறிந்து வரலாற்றை சிதைக்கின்ற செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். அதற்கு எங்களிடையே பலத்தை உருவாக்குவதற்கு பலமான சக்தியாக தமிழ்த் தரப்பு இருக்கவேண்டும். அப்படி இருக்கின்றபோது புலம்பெயர்ந்த உறவுகளையும் தமிழ்நாட்டுத் தமிழர்களையும் இணைத்துச் செயற்படும்போது பெரிய பலத்தைப் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும். அப்போதுதான் இப்போது இருக்கின்ற அரசை நாங்கள் பல விடயங்களில் தடுத்து நிறுத்த முடியும் என்று பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் புளொட் மற்றும் ரெலோ உறுப்பினர்களுக்கு உரையாற்ற நேரம் ஒதுக்குவது சம்பந்தமாக பேசப்பட்டதா என ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போது, அது சம்பந்தமாக தற்போது கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை -என்றார்




## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நாட்டின் நிலைமை அதோகதி!

இலங்கையில் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத மிகமிக மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அந்நிய செலாவணிக் கையிருப்பு ஏறத்தாழ முழுமையாகக் காலியாகி விட்டது.

அதனால், வெளிநாடுகளுக்கு டொலரில் பணம் அனுப்ப முடியாத கட்டுப்பாடுகள் உச்சத்தைத் தொட்டுள்ளன. இலங்கையில் உழைத்து, வெளிநாட்டுக்குப் பணம் அனுப்புவதைத் தடுக்கும் விதத்திலான விதிமுறைகள் வந்து விட்டன.

அத்தியாவசியப் பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய முடியாத இக்கட்டு கழுத்துக்கு வந்து விட்டது.

சொகுசுப் பாவனைப் பொருள்கள், அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்கு முற்றாகத் தடை வரப்போவது உறுதி என்கின்றன கொழும்பு வட்டாரங்கள். மொபைல் போன்கள், ரெலிவிஷன்கள், குளிரூட்டிகள் போன்ற எலக்ட்ரோனிக் மற்றும் மின் சாதனங்கள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு முழுத் தடை வரப்போகின்றது. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க இந்த நடவடிக்கை என்று அரசு சில சமயங்களில் மக்களின் காதில் பூச்சுற்றலாம்.

1970 களில் இடதுசாரிகள் பங்களிப்போடு அதிகாரத்துக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஐக்கிய முன்னணி அரசு வெளிநாட்டு இறக்குமதிகளை அடியோடு கட்டுப்படுத்தி, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அது நாட்டின் தேசியபொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சுய கட்டுப்பாட்டு நடவடிக்கையாகக் கருதப்பட்டது.

ஆனால், 1977 ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா பெரும்பாலும் திறந்த பொருளாதார முறைமையையே ஏற்படுத்தினார். அன்று முதல் பெரும்பாலும் அந்த சூழ்நிலையிலேயே நாடு இருந்து வந்தது. ஆனால் இப்போது நிலைமை அதுவல்ல. திறந்த பொருளாதாரத்தை முறையாகப் பேண முடியாத அளவுக்கு நிலைமை கையை மீறி வருகின்றது.

வெளிநாடுகளிடம் கடன் வாங்கித் தள்ளிய இலங்கை கடன் தவணைப் பணத்தைக் கட்ட முடியாத பெரும் நெருக்கடியில். நாட்டின் ஏற்றுமதி படுத்து விட்டது. அதனால் அந்நிய செலாவணிக் கையிருப்பு கரைந்து போயிற்று. அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யக் கூட வழியில்லை.

அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தவறுகளுக்கு மேல் தவறிழைத்து வரும் ஆட்சிப் பீடம் அதன் விளைவாக ஏற்படப் போகும் மிகமிக மோசமான பொருளாதார நெருக்கடிகளினால் நாட்டையும் நாட்டு மக்களையும் வாட்டி வதைக்கப் போகின்றது என்பது நிச்சயம்.

இலங்கை நாணயத்தின் – ரூபாவின் – பெறுமதி நாளொரு சரிவும், பொழுதொரு வீழ்ச்சியுமாக மோசமான கட்டத்தை நோக்கிக் கணத்துக்குக் கணம் கவிழ்ந்து வருகின்றது. இதனால் பண வீக்கம், விலைவாசி உயர்வு என மக்களை வதைக்கப்போகும் நெருக்குவாரங்கள் நெருங்கி வருகின்றன.

கொஞ்ச, நஞ்ச அந்நிய செலாவணியை ஈட்டி தந்து, நாட்டின் பொருளாதாரத்துக்குச் சற்றேனும் ஆசுவாசமளித்து, உயிர்ப் பிச்சை வழங்கும் துறைகள் இரண்டே இரண்டுதான். அவற்றும் நிரந்தர சாவுமணி அடிக்கத் தயாராகி விட்டது கோட்டா அரசு என்பதுதான் வேதனையின் உச்சக் கட்டம்.

ஒன்று – ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மூலமான ஏற்றுமதிகள்.

மற்றையது – தேயிலை ஏற்றுமதி.

தைத்த ஆடைகள், கடலுணவுப் பொருள்களை வரிச் சலுகைகளுடன் இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியம் இறக்குமதி செய்கின்றது. அதனால் ஏனைய பிற நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு இந்தப் பொருள்களை ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையால் ஏற்றுமதி செய்ய முடிகின்றது.

இந்த ஏற்றுமதி மூலமான அந்நிய செலாவணி ஈட்டுகை மட்டுமே இப்போதுள்ள ஒரே வாய்ப்பு என்பதால்தான் கொரோனா முடக்கத்துக்கு மத்தியிலும் ஆடைத் தொழிற்சாலைகளை மூடாமல் இயங்க வைக்கவும், அத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இராணுவத்தினர் மூலமாவது தடுப்பூசி செலுத்தவும் அரசு தீவிரமாக முயன்று வருகின்றது என்பது கண்கூடு.

ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச பட்டய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், நாட்டில் மனித உரிமைகளை பேணுதல் போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில்தான் இந்த விசேட வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்கியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம். ஆனால் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற மறுத்து, பேரினவாதப் போக்கில் உறுதியாக நிற்பதற்கு அடம் பிடித்து, இந்த வசதியை இழப்பதற்குக் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது கோட்டா அரசு.

மறுபுறம் அசேதன இரசாயன உரங்கள், களை கொல்லிகள், கிருமி நாசினிகளுக்கு முற்றாகத் தடை விதித்துள்ள கோட்டா அரசின் முடிவினால் தேயிலை உற்பத்தியும், சர்வதேச மட்டத்தில் போட்டியிடுவதற்கான அதன் தரமும் வீழப் போவது உறுதி என்கின்றனர் துறைசார்ந்த நிபுணர்கள்.

இந்த இரண்டும் நடந்தால் நாட்டின் நிலைமை அதோ கதி தான்! பாவம் நாட்டு மக்கள்...!!

# கடல்சார் பொருளாதார அபிவிருத்திகளில் இலங்கை – இந்தியா கைகோர்க்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து



கடல்சார் பொருளாதார அபிவிருத்தியில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் போது தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கிய இந்தியாவிற்கு நன்றியினையும் தெரிவித்தார்.

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் போது அவசர உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்தியக் கடற்படையினருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கொழும்பு துறைமுகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது அவசரக் கோரிக்கையை ஏற்று, தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கிய இந்திய அரசாங்கம் மற்றும் இந்தியக் கடற்படை, இந்தியகடலோரகாவற்படை ஆகியவற்றுக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பாகவும் இலங்கை மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கைக்கு உதவிகளும் ஒத்துழைப்புகளும் தேவைப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உடனடியாக உத வுகின்ற இந்தியா கப்பல் விபத்தின் போதும், விரைந்து வந்து தமது உதவிகளை வழங்கியிருந்தது.

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்துவற்கு மாத்திரமன்றி, ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிடுவதிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு எமக்குப் பேருதவியாக அமைந்திருந்தது.

எதிர்காலத்திலும், கடலுக்கு அடியில் இருக்கின்ற கொள்கலன்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கான தொழில் நுட்ப உதவிகளை இந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம். – என்று தெரிவித்தார்.

மேலும், கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை இந்திய அரசாங்கத்திடம் தான் கோரியிருக்கின்றமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, இரண்டு நாடுகளும் அவசர தேவைகளில் மாத்திரமன்றி கடல்சார் பொருளாதார அபிவிருத்தியிலும் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சடாசோதி குடும்ப கல்வி நிதிய (SSFEF சுவிஸ்) ஸ்தாபகர் திரு.ச.புலேந்திரன் அவர்களின் அனுசரணையில் கொரோனாப் பேரிடரை முன்னிட்டு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கற்கும் வறிய மாணவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கட்ட போது...

# மாணவர் உரிமை மறுக்கப்படுவதாக அரசுக்கு எதிராக முறைப்பாடு பதிவு

மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என அரசுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை, மட்டக்களப்பு – இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவில், மட்டக்களப்பு – இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளது.

குறித்த முறைப்பாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளவை வருமாறு –

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுமார் ஒரு வருடமும் மூன்று மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்துக்கு அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையோ அல்லது தீர்வையோ வழங்குவதாகத் தெரியவில்லை. ஆகவே தான் அரசுக்கு எதிராக இத்தகைய முறைப்பாட்டை நாம் பதிவு செய்துள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் 1,113 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆகையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இணையத்தின் ஊடாகக் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தக் காலகட்டத்தில், பெரும்பாலான மாணவர்களுக்கு சமவாய்ப்பு இல்லாத காரணத்தால் அவர்களின் கற்றல் செயற்பாடுகளில் இடைவிலகல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்டிருக்கும் தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகள் வெறும் பலகையை மட்டும் வைத்துக் கொண்டு கற்றல் செயற்பாடுகள் எதுவுமே இல்லாத நிலைமை காணப்படுகின்றன.


தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதில் காட்டும் அக்கறையை ஏன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அரசாங்கம் காட்டுவதில்லை.

இதேவேளை ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி வழங்கவில்லை. இது முற்றிலும் கண்டிக்கத்தக்கது. சுகாதார அமைச்சின் சுற்றுநிருபம் மீறப்பட்டுள்ளது. – என இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொ.உதயரூபன் உள்ளிட்டோர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக சுகாதார அமைப்பால் வைரஸ் தோற்றத்தைக் கண்டுபிடிக்க முடியாது



உலகை அச்சுறுத்தி கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் கண்டறியப்பட்டது.

அதன் பின் பெரும்பாலான நாடுகளுக்கும் பரவி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸ் சீனாவின் வூகான் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது என்றும் ஆய்வகத்தில் இருந்து வெளியேறி உள்ளது என்றும் சீனா மீது அமெரிக்கா குற்றம் சாட்டியது.

மேலும் சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார அமைப்பு செயல்பட்டு உண்மைகளை மறைக்கின்றன எனவும் அமெரிக்கா கூறியது. ஆனால் அதை சீனா திட்டவட் டமாக மறுத்து கொரோனா வைரஸ் இயற்கையாக உருவானது என்று தெரிவித்தது. ஆனால் அமெரிக்கா கொடுத்த நெருக்கடி காரணமாக கொரோனா வைரஸ் தோற்றம் குறித்து கண்டுபிடிக்க உலக சுகாதார அமைப்பு தனது நிபுணர் குழுவை சீனாவுக்கு அனுப்பியது.

அவர்கள் சீனாவின் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டனர். வைரஸ் வெவ்வால்களிடம் இருந்து பரவி இருக்கலாம் என்ற அடிப்படையிலும் ஆய்வு செய்தனர். மேலும் வூகான் ஆய்வகத்திலும் விசாரனை செய்தனர். கொரோனா வைரஸ் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்று நிபுணர் குழு தெரிவித்தது. இந்த நிபுணர் குழு தனது ஆய்வறிக்கையை உலக சுகாதார அமைப்பிடம் அளித்துள்ளது. இதற்கிடையே கொரோனாத் தோற்றம் குறித்து கண்டறிய அடுத்த கட்ட ஆய்வு மேற்கொள்ளப் படும் என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பால் கொரோனா வைரஸ் தோற்றத்தை கண்டுபிடிக்க முடியாது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய விஞ்ஞானிகள் கூறியதாவது:

அமெரிக்கா– சீனா இடையே அரசியல் பதற்றங்கள் நிலவி வரும் சூழ்நிலை காரணமாக கொரோனா வைரஸ் தோற்றம் குறித்து நம்பகமான விடைகளை உலக சுகாதார அமைப்பால் கண்டுபிடிப்பது என்பது சாத்தியமற்றது. இது உலக சுகாதார அமைப்பின் பணியில் எனவே இந்த விசாரனையை உலக சுகாதார அமைப்பு மேற்கொள்ளக்கூடாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் ஆவணி மாதத்துக்குள் முழுமையாக வெளியேறும்

## வெள்ளை மாளிகை தகவல்



அமெரிக்காவின் இரட்டை கோபுரம் மீது தாக்குதல் நடத்திய அல்–கொய்தா அமைப்புக்கு அடைக்கலம் கொடுத்த ஆப்கானிஸ்தான் மீது 2001 ஆம் ஆண்டு அமெரிக்கா போர் தொடுத்தது. அங்கு ஆட்சியில் இருந்த தலிபான்கள் விரட்டப்பட்டனர்.

ஆனால் ஆப்கானிஸ்தானின் அரசுக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. இதையடுத்து நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டு தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது.

இதற்கிடையே கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்க அரசுக்கும், தலிபானுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக திரும்ப பெறப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. அமெரிக்காவில் புதிய அதிபராக பதவி ஏற்ற ஜோ பைடன் கூறும்போது ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதிக்குள் திரும்ப பெறப் படும் என்று தெரிவித்தார்.

இப்பணி முழுவீச்சில் நடந்து வந்த நிலையில் பக்ராம் விமானப் படைத் தளத்தில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேறின. இந்த விமானப்படை தளம் ஆப்கானிஸ்தானில் மிகப்பெரிய விமானப்படை தளம் என்பது குறிப்பிடத்தக்கது.

20 ஆண்டுகளுக்குபிறகு அமெரிக்க படைகள் வெளியேறத் தொடங்கியுள்ளன. இதனால் சில நாள்களில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறலாம் என்று தகவல் வெளியானது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் முழுமையாக வெளியேறும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜன்சாகி கூறியதாவது:

ஆப்கானிஸ்தானில் பக்ராம் விமானப்படை தளத்தில் இருந்து நேற்று நேட்டோ படையினர் வெளியேறினர். அமெரிக்கப் படைகள் முழுமையாக ஓகஸ்ட் மாத இறுதியில் வெளியேறும் என்றார்





# டெல்டா கொரோனாவுக்கு எதிராக வீரிய செயல்திறன் கொண்டது ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசி

அமெரிக்காவின் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் கொரோனாத் தடுப்பூசியை தயாரித்துள்ளது. இந்த தடுப்பூசியின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அனுமதி அளித்துள்ளன.

ஒரு டோஸ் மட்டுமே போடக்கூடிய வகையிலான தடுப்பூசி இது வாகும். ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை இந்தியாவுக்கு கொண்டு வருவது குறித்து மத்திய அரசுடன் பேச்சு நடத்தி வருவதாகவும், ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசிக்கு இந்தியாவில் பரிசோதனை தேவையில்லை என்று மத்திய அரசு கூறியதாக அந்நிறுவனம் சமீபத்தில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், வேகமாகப் பரவி வரும் டெல்டா வகைக் கொரோனா நோய்த்தொற்று மற்றும் சார்ஸ் வைரஸ் எனப்படும் தீவிர சுவாசக் கோளாறு நோய்களுக்கு எதிராக வீரியத்துடனும் மற்றும் நீடித்து செயல்படுவதை தரவுகள் நிரூபிக்கின்றன என ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் தடுப்பூசி நோய் எதிர்ப்பு திறன் 8 மாதங்கள் வரை நீடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் வெப்பத்தை தாக்குப்பிடிக்க மக்கள் நீர் நிலைகளுக்கு படையெடுப்பு

கனடாவை கலங்கடித்துவரும் வெப்பத்தை தாக்குப்பிடிக்க முடியாத மக்கள் நீர்நிலைகளை நோக்கி படையெடுத்துவருகின்றனர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் வெப்பம் 49 டிகிரி செல்சியஸை கடந்து, அனல் காற்று வீசி வருகிறது. கொளுத்தும் வெப்பத்தை சமாளிக்க முடியாமல் கனடாவில் கடந்த வாரத்தில் மட்டும் சுமார் 500 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையே வெப்பத்தை எதிர் கொள்ளவும், உடலை குளிர்ச்சியுடன் வைத்துக்கொள்ளவும் பூங்காக்களில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நீரூற்றில், சிறுவர்கள் உற்சாகமாக குளியலிட்டு மகிழ்ந்தனர்

INDIVIDUAL
ENGLISH CLASSES
K.GANESH (BA. Pera)
Grade - 7 தொடக்கம்
பட்டதாரிகள்,
தொழில் புரிவோர்,
English Medium Courses
செய்பவர்களுக்கு,
Fluent Spoken.



077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்



# பாடசாலைக் கட்டணம் கட்ட முடியாவிட்டால் சாவுங்கள்!

## எதிர்ப்பைக் கிளப்பியிருக்கும் பா.ஜ.க. அமைச்சர்

'பாடசாலைக் கட்டணம் கட்ட முடியவில்லை என்றால்செத்துப்போங்கள்' என மாணவர்களின் பெற்றோர்களிடம் மத்தியப் பிரதேச கல்வி அமைச்சர் பேசியிருக்கின்றமை சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை காரணமாக பெரும்பாலான பாடசாலைகள், கல்லூரிகள் மூடப்பட்டு இணையம் வழியாகக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. கொரோனா காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்பட்டு மக்கள் அவதியடைந்துள்ளனர். இந்த நிலையில், தங்கள் குழந்தைகளின் கல்விக் கட்டணத்தைச் செலுத்த முடியாத அவல நிலையில் பெற்றோர்கள் உள்ளனர். கல்விக் கட்டணங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் போன்றவையும் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளன. எனினும், தனியார் பாடசாலைகள் தொடர்ந்தும் அதிக அளவில் கட்டணங்களை வசூலிக்கின்றன என புகார்கள் எழுந்துள்ளன.

இவ்வாறே, மத்தியப் பிரதேசத்தில் தனியார் பாடசாலைகள் கூடுதல் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக கல்வி அமைச்சர் இந்தர் சிங் பர்மரை அவரது இல்லத்துக்குச் சென்று பெற்றோர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர். அப்போது, பாடசாலைகள் திறக்காத நிலையில், இவ்வளவு கட்டணம் வசூலித்தால் எப்படி நாங்கள் செலுத்துவது என்று கவலை தெரிவித்த பெற்றோர்கள், 'நாங்கள் என்னதான் செய்வது, செத்துத்தான் போகவேண்டும்' என்று வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

அதற்கு அமைச்சர் இந்தர் சிங் பர்மரோ, 'நீங்கள் விரும்பினால் சாவுங்கள்!' எனக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அமைச்சரின் இந்த பேச்சு பெற்றோர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது.

இது குறித்து பெற்றோர்கள் சங்கத்தின் தலைவர் கமல் விஸ்வகர்மா கூறுகையில், 'உயர் நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் மாநில அரசின் வழிகாட்டுதல்களுக்கு எதிராக தனியார் பாடசாலைகளில் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இது குறித்து அமைச்சரிடன் புகார் அளிக்க 60 பேர் சென்றோம். அமைச்சருக்காக ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாகக் காத்திருந்தோம். ஆனால், அமைச்சரோ எங்களிடம் பேசாமல் நேராக தனது காரை நோக்கிச் சென்றார். நாங்கள் எங்களை நிலையை அவரிடம் கூறிய போது, இவ்வாறு மோசமான விதத்தில் கோபத்தோடு தெரிவித்தார்' என்று குறிப்பிட்டார்.

அமைச்சரின் இந்தப் பேச்சு தொடர்பான காணொலி பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது. தனது பொறுப்பற்ற பேச்சிற்காக அமைச்சர் பதவியிலிருந்து இந்தர் சிங் பர்மர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள காங்கிரஸ், அவர் மீது முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

# இரண்டாவது அலை ஓய்ந்துவிட்டதாக நினைத்துவிடாதீர்கள்!

## தமிழக சுகாதாரத் துறைச் செயலாளர் எச்சரிக்கை

கொரோனாவின் இரண்டாவது அலை ஓய்ந்து விட்டதாக நினைத்து அவதானமின்றி இருந்துவிடக்கூடாது என்று தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் எச்சரித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த தமிழக சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், ஊரடங்கில் இருந்து தளர்வுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் கொரோனாத் தடுப்பு விதிகளை மக்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டியது அவசியம். தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் கவனமின்றி செயல்படக் கூடாது.

கொரோனா நோயாளிகளைக் கண்டறியும் பணி தீவிரமாக நடந்துவருகிறது. கண்காணிப்புப் பணியை தீவிரமாக மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



கொரோனா உயிரிழப்புகளை தமிழக அரசு மறைக்கவில்லை. மறைப்பதற்கான அவசியமும் இல்லை. டெல்டா பிளஸ் மட்டுமன்றி அனைத்து வகையான தொற்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கண்காணிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# தனது ஊரை 'ஒரு மினி பாகிஸ்தான்' என்று பதிவிட்டவர் கைதானார்

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் ரேவா மாவட்டத்தில் உள்ள இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அம்ரேதி கிராமத்தைச் சேர்ந்தவர் 32 வயதாகும் அக்பர் கான். இவர் ஓமனில் உள்ள எண்ணெய் வயல்களில் பணியாற்றி வந்த நிலையில் கொரோனா பொதுமுடக்கம் காரணமாக சொந்த கிராமத்திற்கு திரும்பியுள்ளார்.

இவர் சமீபத்தில் பேஸ்புக்கில் 'அம்ரேதியை பாருங்கள் - இது ஒரு மினி பாகிஸ்தான்' எனதலைப்பிட்டுதன்னுடைய கிராமத்தின் படத்தை பகிர்ந்துள்ளார். அக்பர்கானின் இந்த போஸ்ட் விரைவாகவே பரவியது. அதே நேரத்தில் இந்திய கிராமத்தை இப்படி 'மினி பாகிஸ்தான்' என வர்ணித்ததற்காக அவருக்கு கண்டனங்களும் எழுந்தன.

உள்ளூரைச் சேர்ந்தவர்கள், அண்டை கிராமத்தினர் மற்றும் அரசியல்வாதிகள் சிலர் என அக்பர் கானின் செயலுக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி காவல் நிலையத்தில் புகார்கள் அளித்தனர்.

புகார்களையடுத்து இளைஞர் அக்பர் கானை கைதுசெய்த காவல் துறையினர், கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தூண்டுவது உள்ளிட்ட ஐ.டி. சட்டப் பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்குப்பதிவு செய்தனர். அவரிடம் காவல்துறையினர் விசாரித்த போது, தான் சாதாரணமாகத் தான் அப்படி பதிவிட்டேன் எனவும் தங்கள் ஊரில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வசித்து வருவதால் தங்கள் கிராமத்தை 'மினி பாகிஸ்தான்' என்றே பிறர் அழைப்பார்கள் என்றும் அவர் விளக்கம் அளித்துள்ளார்.

இதனையடுத்து அண்டை கிராம மக்களை சந்தித்த காவல் துறையினர் இது போன்று அம்ரேதி கிராமத்தை குறிப்பிடக்கூடாது என எச்சரித்தனர்.

கடந்த மே மாதத்தில் உத்தரப் பிரதேச மாநிலம் அமேதியில் கிராமப் பஞ்சாயத்து தேர்தலில் வெற்றிபெற்ற இம்ரான் கான் என்ற நபர் பாகிஸ்தானைப் போற்றிப் புகழும் வகையிலான பாடல்களை ஒலிபரப்பி, மோட்டார் சைக்கிள் பேரணியை நடத்தியதற்காக கைதானார். அவருடைய நண்பர்கள், ஆதரவாளர்கள் சிலரும் தேசிய இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டனர் என கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவாரின் ரூபா 65 கோடி மதிப்பிலான சொத்துக்கள் முடக்கம்

மகாராஷ்டிரா மாநிலக் கூட்டுறவு வங்கியில், 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், கடன்வழங்கியதுஉள்ளிட்டவிடயங்களில் ரூபா.1,000 கோடி ஊழல் நடந்ததாக கடந்த 2019 ஆம் ஆண்டு பொலிசார் வழக்குப்பதிவு செய்தனர்.

பின்னர் இந்த வழக்கை அடிப்படையாக வைத்து சட்டவிரோத பணப்பரிமாற்ற மோசடி நடந்துள்ளதாக தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவரும், துணை முதல்வருமான அஜித் பவார், அவரது மனைவி உள்ளிட்டோர் மீது இந்திய அமுலாக்கத் துறை வழக்கு பதிவு செய்தது.

இந்த ஊழலில் உரிய ஆவணங்கள் இன்றி கடன் வழங்கியது, குறைந்த விலைக்கு சர்க்கரை ஆலைச் சொத்துகளை விற்றது என பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுப்பபட்டன.

இந்த நிலையில் கூட்டுறவு வங்கி ஊழல் தொடர்பாக அமுலாக்கத்துறை சத்தாரா மாவட்டத்தில் சிமன்காவ் - கோரேகாவ் பகுதியில் உள்ள ரூபா.65 கோடி மதிப்பிலான சர்க்கரை ஆலையின் சொத்துகளை முடக்கியுள்ளனர்.

இதுகுறித்து இந்திய அமுலாக்கத் துறைவெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், 'முறையான விதிகளைப் பின்பற்றாமல் அதிகாரிகள், மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி இயக்குனர்களால் அவர்களது குடும்பத்தினர் மற்றும் தனியாருக்கு சர்க்கரை ஆலை குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அப்போது அஜித்பவார் மாநில கூட்டுறவு வங்கியின் செல்வாக்கு மிகுந்த இயக்குநர்களில் ஒருவராக இருந்து உள்ளார்.

குறைந்த விலைக்கு விற்கப்பட்ட சர்க்கரை ஆலைச் சொத்துகளைக் காட்டி, மாநில கூட்டுறவு வங்கியில் ரூபா.700 கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது. இதையடுத்தே சர்க்கரை ஆலை சார்ந்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன' என்று கூறப்பட்டுள்ளது.



## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# அரையிறுதிக்குள் அட்டகாசமாக நுழைந்தது இத்தாலி

மியூனிச்சில் இன்று அதிகாலை நடைபெற்ற யூரோ கிண்ணக் கால்பந்து காலிறுதிப் போட்டியில் இத்தாலி அணி 2-1 என்ற கோல் கணக்கில் உலகின் முதல் நிலை அணியான பெல்ஜியத்தை வீழ்த்தி யூரோ 2020 அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இத்தாலி அணியில் நிகோலோ பாரெல்லா 31 ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும் லாரென்சோ இன்சிக்னி 44 ஆவது நிமிடத்தில் வெற்றிக்கான 2 ஆவது கோலையும் அடிக்க, பெல்ஜியம் அணியில் இடைவேளைக்கு சற்று முன் நட்சத்திர வீரர் ரொமிலு லுகாகு பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றினார்.

பெல்ஜியம் அணியின் கோல்டன் தலைமுறை என அழைக்கப்படும் வீரர்களுக்கு இது பிரியாவிடைப் போட்டி என்றே கருதப்படுகிறது. கெவின் டி புரூய்ன், ரொமிலு லுகாகு, யூரி டைலி மான்ஸ், தோக்ரன் ஹசார்ட் இவரது சகோதரர் ஈடன் ஹசார்ட் ஆகியோர் அடுத்த யூரோ கிண்ணத் தொடரில் ஆடுவார்களா என்பது சந்தேகம். இன்னொரு முறை இவர்களை அடுத்த ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் ரசிகர்கள் பார்க்கலாம்.

இத்தாலி அணி செவ்வாயன்று ஸ்பெயினைஅரையிறுதியில்லண்டனில் சந்திக்கிறது.

# அரையிறுதியில் ஸ்பெயின் சுவிஸ் வெளியேறியது

செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் நடைபெற்ற யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட் மூலம் தீர்மானிக்கப்பட, ஸ்பெயின் அணி 3-1என்றகோல்கணக்கில்சுவிட்ஸர்லாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

முழு நேர ஆட்டத்தில் 8 ஆவது நிமிடத்தில் சுவிட்ஸர்லாந்து அடித்த சேம்சைட் கோலினால் ஸ்பெயின் 1-0 என்று முன்னிலை பெற்றது.

ஆனாலும், இடைவேளைக்குப் பிறகு 68 ஆவது நிமிடத்தில் சுவிட்ஸர்லாந்தின் மெஸ்ஸி என்று அழைக்கப்படும் செட்ரான் கீரி அபாரமாக ஒரு கோலை அடிக்க, ஆட்டம் முழு நேரத்தில் 1-1 என்று சமனாகி கூடுதல் நேரத்துக்குச் சென்றது.

கூடுதல் நேரத்தில் ஸ்பெயினின் தாக்குதல் ஆட்டத்தில் சுமார் 12 கோல் முயற்சிகளை சுவிட்ஸர்லாந்து கோல் கீப்பர் சோமர் அயராது தடுத்தார்.



நடுவர் அவசரப்பட்டு சுவிட்ஸர்லாந்து வீரர் ரிமோ ஃப்ராய்லருக்கு சிவப்பு அட்டை காட்டி வெளியேற்ற, சுவிஸ் அணி 10 வீரர்களுடன் ஆட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டது.

அந்தப் பிரச்சினையை வீடியோவில் சரிபார்த்து நடுவர் உறுதி செய்திருக்க வேண்டும். ஆனால் ஸ்பெயின் வீரர் கீழே விழுந்து புரண்டவுடன் வந்து சிவப்பு அட்டையைக் காட்டி வெளியேற்றியது சுவிட்ஸர்லாந்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

பெனால்டி ஷூட் அவுட்டில் ஸ்பெயின் வீரர்கள் செர்ஜியோ பஸ்கெட்ஸ் மற்றும் ரோட்ரி ஆகியோர் பதற்றத்தில் கோல்களைத் தவறவிட்டனர்.

ஒன்றை சோமர் அபாரமாகத் தடுக்க ஒரு அடி கோல் போஸ்ட்டில் பட்டு திரும்பியது. ஆனால், ஸ்பெயின் அணி யில் ஜெரார்ட் மொரீனோ, டானி ஆல்மோ தங்கள் ஷூட்டை சரியாக கோலாக மாற்ற கடைசி ஷாட்டை மிகேல் அயர்சபால் கோலாக்க, ஸ்பெயின் 3-1 என்று வெற்றி பெற்றது.




# 400 மீற்றர் தடை தாண்டலில் நோர்வே வீரர் அசத்தல்

## 29 ஆண்டுகால உலக சாதனை முறியடிப்பு

ஒஸ்லோவில் நடைபெறும் டயமண்ட் லீக் தடகளப் போட்டித் தொடர் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் 46.70 விநாடிகளில் இலக்கை எட்டி உலக சாதனை நிகழ்த்தினார் கார்ஸ்டன்.

1992 இல் 29 ஆண்டுகளுக்கு முன்பாக, அமெரிக்காவின் கெவின் யங் இதே 400 மீ தடை ஓட்டத்தில் 46.78 விநாடிகளில் இலக்கை எட்டி உலக சாதனை புரிந்திருந்தார், அதை இப்போது நோர்வே வீரர் கார்ஸ்டன் முறியடித்துள்ளார்.

ஒஸ்லோவின் பிரபல பிஸ்லெட் ஸ்டேடியத்தில் 5,000 நார்வே ரசிகர்கள் கரகோம் செய்த உற்சாகத்தில் இந்த உலக சாதனையை நிகழ்த்தினார் கார்ஸ்டென் வார்ஹோம்.

என் உடலில் வேகமாக ஓடுவதற்கான நேரமும் ஆற்றலும் இருப்பதை உணர்ந்தேன். இதுதான் இந்தச் சாதனையை நிகழ்த்த சரியான தருணமும் கூட. அனைவரும் பல ஆண்டுகள் உடைக்காத உலக சாதனை பற்றி பேசிக்கொண்டிருந்தனர். என்னிடம் முறியடிக்கும் திறமை இருப்பதாக நம்பினேன் ஆனாலும் அதைச் செய்வது என்பது சிறப்பு வாய்ந்தது.

டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 23ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 8 ஆம் திகதி வரை நடை பெறுகிறது. இதில் 100மீ, 200 மீ ஓட்டம் போ 400 மீ தடகளத்துக்கும் சிறப்பு கவர்ச்சி உண்டு.

ஆனால், வார்ஹோமுக்கு சுலப மல்ல, அங்கு அமெரிக்க வீரர் ராய் பெஞ்சமின் இவருக்கு சவால் அளிக்கத் தயாராக இருக்கிறார். இவர் 46.83 விநாடிகளில் இலக்கை அடைந்து என்று கொஞ்சம் அருகில்தான் உள்ளார். ஆனால், இதற்கு முன்னரே ஜூலை 9 ஆம் திகதி உலக சாதனையாளர் கார்ஸ்டனும், ராய் பெஞ்சமினும் மொனா கோவில் ஒரு போட்டியில் சந்திக்கின்றனர்.

# அர்ஜூன ரணதுங்கவுக்கு இலங்கைக் கிரிக்கெட் சபை பதிலடி

‘இலங்கை தொடருக்கு இந்தியா இரண்டாம் தர அணியை அனுப்பியுள்ளது, இது நம் கிரிக்கெட்டுக்கு நிகழ்ந்த அவமானம்’ என்று முன்னாள் இலங்கை கப்டன் ரணதுங்க கூறியிருப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபையே பதிலடி கொடுத்துள்ளது.

தொலைக்காட்சி வியாபார வருமானம் போன்ற பண விடயங்களுக்காக, இந்தியா எந்த அணியை அனுப்பினாலும் விளையாடத் தயார் என்ற இலங்கை கிரிக்கெட் சபையின் மனநிலையை அர்ஜூன ரணதுங்கா அண்மையில் சாடியிருந்தார்.

இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை, இங்கு வந்துள்ள இந்திய அணியின் 20 வீரர்களில் 14 பேர் இந்திய அணிக்காக 3 வடிவங்களிலும்






ஏற்கெனவே ஆடியவர்கள். ஆகவே, இது இரண்டாம் தர அணி அல்ல என்று பதில் கொடுத்துள்ளது. ‘இப்போதெல்லாம் கிரிக்கெட்டில் 3 வடிவங்களிலும் போட்டிகள் நடைபெறுவதால் ஒவ்வொரு வடிவத்துக்கும் ஒவ்வொரு அணி என்பதை பல நாடுகளும் கடைப்பிடித்து வருகின்றன. இதில் இரண்டாம் தரம், முதல் தரம் என்பதெல்லாம் ஆட்டத்தைப் பொறுத்ததே’ என்றும் இலங்கைக் கிரிக்கெட் சபை கூறியுள்ளது. இலங்கைக்கு வந்துள்ள இந்திய அணியில் 6 வீரர்கள் மட்டுமே இதவரை இந்திய தேசிய அணியில் விளையாடாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி வரிச் சலுகையை அரசியல் தீர்வுக்குப் பயன்படுத்தல் வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை, பயங்கரவாத சட்டத்தை அகற்ற மாத்திரம் பயன்படுத்தாமல் அரசியல் தீர்வுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் பயன்படுத்த வேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியாவில் காணாமல் போன உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்ட பந்தலில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கோ.ராஜ்குமார் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

காணாமல் ஆக்கப்பட்டோரால் மேற்கொள்ளப்படும் போராட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை, 1,600 ஆவது நாளை எட்டவுள்ளது. இதனால் அன்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி.வரிச் சலுகையை, பயங்கரவாத சட்டத்தை அகற்றுவதற்கு மட்டுமல்லாமல் அரசியல் தீர்விற்கும் பயன்படுத்த வேண்டும்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.வரிச் சலுகையை நிறுத்துவது பற்றிய பேச்சின் காரணமாக, இலங்கை அரசில் ஒரு பதற்றமான சூழ்நிலை காணப்படுவதை அதன் நடவடிக்கையின் ஊடாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம், ஜனாதிபதி பைடன் நிர்வாகத்தின் ஆசீர்வாதத்துடன் இலங்கையில் அரசியல் தீர்வை அடைய முடியும். தமிழர்களிடையே 'பொது வாக்கெடுப்பு' எடுப்பதன் ஊடாக இந்தத் தீர்வை அடைய முடியும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க மத்தியஸ்தத்துடன் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்க ஐரோப்பிய ஒன்றியத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தடுப்பூசிகளை பாரபட்சமின்றி வன்னி மக்களுக்கும் வழங்குக

## செல்வம் எம்.பி. கோரிக்கை

கொரோனாத் தடுப்பூசிகளை பாரபட்சமின்றி வன்னி மக்களுக்கும் ஏற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்பூசிகள் இதுவரை வன்னி மக்களுக்கு ஏற்றப்படாமை தொடர்பாக அவர் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கொரோனாத் தொற்று நாட்டில் பரவலாக காணப்படும் நிலையில் தடுப்பூசிகளை வழங்குவதற்கு அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும் தற்போது இந்த நடவடிக்கையில் அரசின் ஈடுபாடு போதுமானதாக காணப்படாமையாலேயே பல பகுதிகளிலும் மக்கள் முதலாவது தடுப்பூசியைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குச் சென்றுள்ளனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவை உள்ளடக்கிய வன்னி பிரதேசத்தில் இதுவரை எந்த ஒரு பொது மகனுக்கும் தடுப்பூசி வழங்கப்படவில்லை.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் சுகாதாரப் பகுதியினருக்கு மாத்திரமே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பொது மக்களுக்கு வழங்க பாரபட்சம் காட்டி வரும் அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

வட மாகாணத்தின் நுழைவாயிலாகக் காணப்படும் வவுனியா மக்களுக்கு தடுப்பூசியை வழங்குவது கட்டாயமாகும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கப்பால் இன்று வவுனியாவில் கொரோனா தொற்றாளர்கள் விகிதாசார அடிப்படையில் பார்க்கின்ற போது அதிகமாகக் காணப்படுகின்றனர். கொரோனா மரணங்கள் 19 வரை அதிகரித்துள்ளது. இது அம் மாவட்டத்தில் வாழும் மக்கள் தொகையோடு ஒப்பிடுகையில் அதிகமாகவே பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று மன்னார் மாவட்டமும் இந்தியாவில் பரவியுள்ள டெல்டா வைரஸ் பரவல் மீனவர்கள் மூலம் பரவுவதற்கு அதிகம் வாய்ப்புள்ள மாவட்டமாகக் காணப்படுகின்றது. ஏனவே இங்குள்ள மக்களுக்கும் உடனடியாகத் தடுப்பூசியை வழங்க வழிவகை செய்ய வேண்டும்.



முல்லைத்தீவில் மீன் வியாபாரத்துக்காக பல மாவட்டங்களிலும் இருந்து மக்கள் வந்து செல்கின்றமையாலும் குறித்த மாவட்டம் வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண எல்லைகளைக் கொண்டு காணப்படுவதாலும் ஏனைய மாகாண மக்கள் பல்வேறு தேவைகளின் பொருட்டு இங்கு வந்து செல்வதாலும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு தடுப்பூசி கட்டாயமாக செலுத்தப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனினும் தற்போதைய அரசாங்கம் இது தொடர்பில் அக்கறையின்றிக் காணப்படுகின்றமையைப் பார்க்கும்போது பாரபட்சமாக செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது என அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முள்ளியவளைப் பகுதியில் ஆர்.பி.ஜி. எறிகணைகள் மீட்பு



முல்லைத்தீவு - முள்ளியவளை முதலாம் வட்டாரப் பகுதியில் கிணற்றில் இருந்து அபாயகரமான வெடி பொருள்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) மீட்கப்பட்டுள்ளன என முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முதலாம் வட்டார பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியில் கிணறு ஒன்றை இறைத்து ஆழப்படுத்திய போதே கிணற்றுக்குள் மண்ணில் புதைந்த நிலையில் மூன்று ஆர்.பி.ஜி. எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்கு காணி உரிமையாளர் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து மேற்படி வெடிபொருள்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடி பொருள்களை செயலிழக்கச் செய்ய முள்ளியவளை பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் பல பகுதிகளுக்கும் டெல்டா பரவி இருக்கலாம்!

## சுகாதார சேவைகள் துணை பணிப்பாளர்

டெல்டா மாறுபாடு நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவி இருக்கலாம் என்று சுகாதார சேவைகள் துணை பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கூறப்பட்ட படி நாட்டின் பல பகுதிகளுக்கு பரவியுள்ளது என்பதற்கான எந்த ஆதாரமும் இதுவரை இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

சமூகம் மத்தியில் கொடிய மாறுபாடு பரவியுள்ளதா என்பதை அறிய சுகாதார அமைச்சகம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பி.சி.ஆர். சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்த சூழ்நிலையை சுகாதார அமைச்சு இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் இது தொடர்பான மரபணு வரிசைமுறைகளை மேற்கொண்டு வருகிறது, விரைவில் முடிவுகள் வெளியிடப்படும்.

இதற்கிடையில், தற்போது நாட்டில் கொவிட் – 19 தொற்றுக்கள் கீழ்நோக்கிய போக்கில் காணப்படுகின்றன.

இருப்பினும், இதனை கட்டுக்குள் வைத்திருப்பது என்பது, மக்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் மற்றும் உருவாகி வரும் கொத்தணிகளைப் பொறுத்தது என்று அவர் கூறியுள்ளார்.

# தீ விபத்திற்குள்ளான கப்பலை சூழவுள்ள 3 சதுர மைல் கடற்பரப்புக்குள் சிதைவுகள்

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்திற்குள்ளான எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூலம் கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் ஏற்பட்டிருக்கும் தாக்கங்களைக் கணிப்பிடுவதற்கு கடந்த மாதம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்திய கடற்படையின் ஆய்வு கப்பலான சர்வேக்ஷாக் அதன் ஒருகட்ட சோதனையை நிறைவு செய்துள்ளது.

அதற்கமைய எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலை சூழ்ந்துள்ள பகுதிகளில் ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படைக் கப்பலான சர்வேக்ஷாக் 558 மைல்கள் சைட் ஸ்கான் சோனர் சோதனையை நிறைவு செய்துள்ளதாகக் கொழும்பிலுள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

சிதைவடைந்த கப்பலை சூழவுள்ள மூன்று சதுர மைல் பரப்பிற்குள் சிதைவுகள் காணப்படுகின்றன எனவும் இப்பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட சென்சர்கள் மற்றும் இரு ஆய்வுப் படகுகள் மூலம் மூன்று பகுதிகளில் ஒரே நேரத்தில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என இந்திய உயர் தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்திய கடற்படையின் ஆய்வு கப்பலான சர்வேக்ஷாக் கடந்த ஜூன் 24 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் கடற்பயணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தால் விடுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வமான கோரிக்கையின் அடிப்படையில் ஐ.என்.எஸ்.சர்வேக்ஷாக் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு (நாரா), இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடற்படை ஆகியவற்றின் ஒன்றிணைவில் இந்தக் கூட்டு ஆய்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒபரேன்சாகர் ஆரக்ஷா 2 இன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்தக் கூட்டு நடவடிக்கை இந்தப் பிராந்தியத்தில் பாதுகாப்பான கடற்பயணத்துக்கு உறுதுணையாக இருக்கும் அதேநேரம், இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஏற்படும் இதுபோன்ற அனர்த்தங்களைத் தணிப்பதற்கு விரைந்து ஆதரவை வழங்குவதற்கான இந்தியாவின் அயலவர்களுக்கு முதலிடம் கொள்கையை மேலும் வலுப்படுத்துவதாக அமைவதாகவும் இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2021இல் வெளியிடப்பெற்றது.